பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 புரட்டாசி 5 ஷவ்வா 7 இதழ் 221
யாழ்ப்பாணம் புதன்கிழமை 21-9-77

## பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியருக்கு 3 மாத லீவு வழங்குக

### தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி வலியுறுத்து

கொழும்பு, செவ்

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் பலர் காயமுற்றும், பொருட்களை இழந்தும் குடியிருந்த இடங்களிலிருந்து நிலை பெயர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களைப் புனர்வாழ்வு செய்வதற்கு போதிய அவகாசம் தேவை. எனவே அவர்களுக்கு 3 மாத அவசர லீவு வழங்க வேண்டுமென தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளது.

வன்செயல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு கடமையாற்ற முடியாது வேலைத்தலங்களை விட்டுச் சென்ற அரசாங்க, கூட்டுத்தாபன தனியார்துறை தமிழ் ஊழியர்கள் இன்னமும் இரண்டு மாதங்களுக்கு வேலைக்குத் திரும்பமுடியாத நிலையில் இருக்கின்றனர். அர

(6ம் பக்கம் பார்க்க)

# கொள்ளைகள் சம்பந்தமாக உரும்பராயில் நால்வர் கைது!

## வல்வெட்டித்துறையில் வீடுகள் பல சோதனை

யாழ்ப்பாணம், புதன்

**வடபகுதியில் நடைபெற்று வந்த கொள்ளைகள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக நேற்று அதிகாலை உரும்பராயைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். இவர்கள் நால்வரும் விசாரணைக்காக கொழும்புக்குக் கொண்டுசெல்லப்படலாமென்று தெரியவருகிறது.**

உரும்பராயில் நேற்று அதிகாலை பொலிசார் நடத்திய தேடுதல் வேட்டையில் ஐவர் சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டதாகவும் விசாரணையின்பின் ஒருவர் விடுதலை செய்யப்பட்டு மற்றும் நால்வரும் பாதுகாப்பில் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

### வல்வெட்டியில் வீடுகள் சோதனை

சமீபத்திய கொள்ளைகள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக நேற்று அதிகாலை வல்வெட்டித்துறைப் பகுதியில் பொலிசாரும் இராணுவத்தினரும் கூட்டாகப் பலவீடுகளில் சோதனை நடத்தினர். பெரிய அளவில் பல வீடுகளில் இந்தச் சோதனை நடைபெற்றது.

ஆயுதங்கள் இருக்கலாமென்ற சந்தேகத்தின்மீதே இச்சோதனைகள் நடைபெற்றிருக்கலாமெனக் கூறப்படுகிறது.

இச்சோதனையின்போது ஒரு வயோதிபத் தம்பதிகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

அச்சுவேலியில் கிராமிய வங்கிக் கொள்ளை முயற்சியிலீடுபட்டுக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள் மற்றும் கொள்ளைகள் சம்பந்தமாகச் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டுள்ளவர்கள் புலன் விசாரணைகளில் தெரிவித்த தகவல்களைத் தொடர்ந்தே நேற்று வல்வெட்டித்துறையிலும் உரும்பராயிலும் தேடுதல் வேட்டை நடைபெற்றதாகவும் இதில்தான் உரும்பராயில் நால்வர் சந்தேகத்தின் மீது பொலிசாரால் விசாரணைக்குக் கொண்டுசெல்லப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

### உயர்குழு பார்வையிட்டது

சமீபத்தில் அச்சுவேலியில் நடந்த வங்கிக் கொள்ளை சம்பந்தமாக இராணுவ-பொலிஸ் உயர் அதிகாரிகள் குழு அச்சுவேலிக்குச் சென்று பார்வையிட்டது. நிலாவரைக்கு அருகே கொள்ளையடித்த கோஷ்டி மோட்டார்காரை

(6-ம் பக்கம் பார்க்க)

## மின்சார சபை மேலதிக வேலை

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் மின்சாரப் பகுதியில் ஆலிப்பலகை இயக்குநர்களின் மேலதிக வேலை ஊதியம் சம்பந்தமாக ஒரு இயக்குநருக்கு 198 மணி நேரம் எவ்வாறு வேலைகொடுக்கப்பட்டது என்பது பற்றிப் பிரதம பொறியியலாளர் திரு. ப. சபாரத்தினம் விசாரணை செய்துவருவதாகவும், இதன் பின்னர் மேலதிக நேரவேலைக்குரியவேதனம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## தமிழ் ஊழியர் பிரச்னை:

### அரச பொறியியலாளர் சம்மேளனம் பிரதமருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழக செயற்குழுக் கூட்டம் நேற்று கழகப்பணிமனையில் நடைபெற்ற போது கொழும்பிலிருந்து வந்திருந்த அரசாங்க பொறியியலாளர் தொழிற்சங்க சம்மேளன பொதுச்செயலாளர் திரு. கே. பி. பியசேன கலந்துகொண்டு உரையாற்றினர்.

63 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 8000 உறுப்பினர்களைக் கொண்ட இச்சம்மேளனத்தின் பொதுச்செயலாளரான திரு. பியசேன தமது உரையில் கூறியதாவது:

கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களுக்கு எவ்வாறு உதவ முடியும் என்பதை எமது சம்மேளனம் ஆலோசனை நடத்தியது அத்துடன் இது தொடர்பான மகஜர் ஒன்றை பிரதம மந்திரிக்கு அனுப்பி விட்டு இப்போது அவரின் பதிலுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம்

பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர் கழகம் றிம்மர் மண்டபத்தில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு தமது ஆதரவைக் கூறிய அவர் தாம் கொழும்பு திரும்பியதும் உடனடியாக அங்குள்ள சகல தொழிற்சங்கங்களின் ஆதரவையும்பெற்று தமிழ் ஊழியருக்கு வேண்டிய நிவாரணத்தைப் பெற அரசாங்கத்திடமிருந்து ஆவன செய்வதாகவும் கூறினர்.

## 'சுப்பர் மார்க்கட்'

கொழும்பு, செவ்வாய்

கொழும்பு புறக்கோட்டையில் முன்னர் மீன்சந்தை இருந்த இடத்தில் 'சுப்பர் மார்க்கட்' ஒன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது,

உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. ஆர்.பிரேமதாசா இன்று இடத்தைப் பார்வையிட்டார்.

இம் மார்க்கட்டை அமைப்பதற்காக செட்டியார் தெரு, பீச்ரோட், றெக்கிளமேஷன் வீதி ஆகிய வீதிகளில் சில கடைகள் அகற்றப்பட இருக்கின்றன. (இ)

## நாளை வேங்கடேசர் தேர்

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேர்த் திருவிழா நாளை நடைபெறவுள்ளது. அன்று ஸ்தம்ப பூஜை காலை 8.00 மணிக்கும் வசந்த மண்டப பூஜை காலை 9.00 மணிக்கும் நடைபெற்று சுவாமி தேருக்கு காலை 10.30 மணிக்கு எழுந்தருளுவார். சுவாமி தேரில் இருந்து பகல் 1 00 மணிக்கு இறங்குவார்.

## விடுதலையாகி 3வது நாளே கைவரிசை காட்டினராம்

யாழ்ப்பாணம், புதன்

சிறைச்சாலையிலிருந்து விடுதலையான மூன்று தினங்களுக்குள்ளாகவே தனது கைவரிசையைக் காட்ட முயன்றாராம் வாலிபர் ஒருவர்.

பிரஸ்தாப வாலிபர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட 'ரிக்ரோனி' கடிகாரம் ஒன்றும், பச்சை வர்ண மகளிர் குடையொன்றும் தற்போது யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவில் இருப்பதாகவும், இதன் உரிமையாளர்களைத் தன்னுடன் நேரில் தொடர்பு கொள்ளுமாறும் பொலிஸ் சார்ஜன்ட் திரு.ஜெட்றிக்கோ கேட்டுக்கொண்டுள்ளார்.

எஸ். குலசேகரம் என்ற சந்தேகநபர் நயினாதீவைச் சேர்ந்தவரென்றும், யாழ்ப்பாணத்தில் உள்ள சைவாலயம் ஒன்றிற்கு அருகில் இவர் திருட்டு முயற்சி மேற்கொண்டபோது பொதுமக்களால் நேற்றுப் பிடித்துத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். [உ]

## இலங்கை சுவீப் டிக்கட் வெளிநாடு செல்கிறது

### லொத்தர் சபை நடவடிக்கை

கொழும்பு, செவ்

தேசிய லொத்தர் டிக்கட்டுகளை வெளிநாடுகளிலும் விற்பனை செய்ய தேசிய லொத்தர் சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இத்தகவலைலொத்தர்சபைத் தலைவர் திரு. எஸ். பி. பியசிறி தெரிவித்தார்.

முதலில் ஜப்பான், மேற்கு ஜெர்மன், அரபு நாடுகள் ஆகிய வெளிநாடுகளில் நம்து சுவீப் டிக்கட்டுகள் விற்பனை செய்யப்படும் என்றும் மற்றைய நாடுகளுக்கு பின்னர் விஸ்தரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் விற்பனையாகும் சுவீப்டிக்கட்டுகளுக்கு இரத்தினக் கற்கள் பரிசாக வழங்கப்படும் என்றும் இதற்கான பரிசு பணமாகப் பெற விரும்புபவர்களுனுக்கு இலங்கையில் உல்லாசப் பிரயாணம் செய்வதற்கு இப்பரிசுப்பணம் செலவிடப்படும் என்றும் திரு. பியசிறி கூறினர்.

உள்ளூரில் விற்பனையாகும் சுவீப் டிக்கட்டுகளுக்குரிய பரிசாக இனிமேல் கார்களுக்குப் பதில் லொறிகள், இரண்டு சக்கர உழவு யந்திரங்கள் ஆகியன வழங்கப்படும் என்றும் அவர் கூறினர். (இ)

# ஈழத் தமிழருக்கு

## உதவிக்கரம் நீட்டுக!

## இந்திய அரசுக்கு அறிவியக்கப் பேரவை கோரிக்கை

சென்னை, செப். 20 ஆகஸ்டு மாதம் பிற்பகுதியில் இலங்கையிலே நடைபெற்ற கலவரத்தின் போது, சிங்கள பெரும்பான்மையினர் திட்டமிட்டே அங்குள்ள தமிழர்களை கொடுமைப் படுத்தியுள்ளனர் உற்றுரையும் உறைவிடங்களையும் பாதுகாப்பையும் இழந்து. ஆதரவின்றித் தவிக்கும் ஈழத் தமிழர்களுக்கு உடனடியாக உதவிட இந்திய அரசு முன்வர வேண்டும்

இவ்வாறு சென்னையில் உள்ள அறிவியக்கப் பேரவை ஒரு தீர்மானம் மூலம் இந்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. தீர்மானத்தை விளக்கி, பேரவையின் அமைப்பாளர் முனைவர் (டாக்டர்) சாலை இளந்திரையன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

'இலங்கைத் தமிழர்கள் இந்த இனவெறித் தாக்குதலால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உலகம் முழுவதும் அறிந்திருக்கின்றது. தமிழகத்திலே உள்ள (மாநிலக்) கட்சிகள் மட்டுமன்றி, இந்திய அரசியல் கட்சிகள் அனைத்துமே, இந்தக் கொடுமைக்கு விரைந்த பரிகாரம் தேடுவதில் இந்திய அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

"பாரிசில் கூடிய அனைத்துலக மக்கள் உரிமைப் பாதுகாப்புப் பேரவையும் இலங்கையிலே நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. அதன் பார்வையாளரான பாரிஸ் நீதிமன்ற வழக்கறிஞர் திரு. கிறிஸ்டியன் ரோஸ்தோக்கர் நேரிடையாகக் கண்டு வந்து தெரிவித்த விவரங்களின் அடிப்படையிலேயே பேரவை இந்த முடிவுக்கு வந்துள்ளது. 'சிங்களப் பெரும்பான்மையினர் உள்ளங்களில் "கடுமையான தமிழர் வெறுப்பு உணர்ச்சி வேர்போட்டுக் கிடக்கிறது" என்னும் உண்மையை எடுத்துக்காட்டி, இலங்கை அரசு தனது சிறுபான்மையினருக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று இலங்கைப் பிரதமரை மனித உரிமைப் பாதுகாப்பு

(5-ம் பக்கம் பார்க்க)

---

## முல்லைத்தீவு பட்டினசபை

# கேள்வி விளம்பரம்

முல்லைத்தீவு பட்டினசபை விசேட ஆணையாளரால் கீழ்க்[illegible]ாணும் வேலைகட்கு அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் [illegible]ரு பிரதிகளில் ஐப்பசி மாதம் 7-ந் திகதி நண்பகல் 12-00 [illegible]ணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் கீழே [illegible]றிப்பிடப்பட்டுள்ள கிரயங்களை காரியாலயத்தில் செலுத்தி [illegible]10-77 நண்பகல் 12-00 மணி வரை பெற்றுக்கொள்ள[illegible]ம். கேள்வியின் பகுதியையோ அன்றி முழுவதையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கும் உரிமை விசேட ஆணையாளருக்குண்டு மேலதிக விபரங்கள் காரியாலய நேரங்களில் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

| வேலை விபரம் | பத்திரக் கிரயம் | கேள்விப் பிணை |
|---|---|---|
| ......... | ......... | ...... |
| 1. சின்னத்தன்காட்டில் மதகு அமைத்தல் | 10 00 | 50-00 |
| 2. கொன்வெண்ற் வீதியில் மதகு அமைத்தல் | 10-00 | 50-00 |
| 3. தபாற்கந்தோர் வீதியில் மதகு அமைத்தல் | .10-00 | 50-00 |
| 4. கள்ளப்பாட்டில் கிணறு கட்டுதல் | 10-00 | 50-00 |
| 5. சந்தைக்கட்டிடத் திருத்தம் | 5-00 | 25-00 |

கே. சிவஞானம்,
விசேட ஆணையாளர்
முல்லைத்தீவு பட்டினம்.

முல்லைதீவுப் பட்டினம்,
முல்லைத்தீவு.
16-9-77.

7152

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு/14749

இளையதம்பி சோமசுந்தரமும்
பெண் தங்கம்மாவும்
'சொர்ணவாசா', ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

வழக்காளி

எதிராக

வேலுப்பிள்ளை யோகநாதன்,
இல 16, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் ஈடு/14749-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1977-ம் வருஷம் புரட்டாதி மாதம் 28-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 3512ம் 1975-2-10 தொடக்கம் 1975-9-18 வரைக்கும் ரூபாய் 2500க்கு 18 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 543-95 செலவில் 500 ரூபாவைக் கழிக்கவும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை "சிவியாவளவு" அல்லது 'வண்ணாவளவு' அல்லது 'ஓடைவளவு' நில பர 3 மூன்றும் வீடும், கிணறும் பயிர் வகைகளும் இதற்கு எல்லை கிழக்கு ரோட்டு வடக்கும் தெற்கும் வல்லி இராசையாவினுதனம், மேற்கு கல்கனி சின்னையாவினுதனம் இதடங்கலும்.

எஸ். சங்கரப்பிள்ளை ஜே. பி.,
கொமிஷனரும்
விலை மதிப்பாளரும்

'வேல்பதி',
புத்தூர்,
11-8-77.

7157

---

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, திங்கள் நேற்று இழுக்கப்பட்ட 631வது தேசிய லொத்தர் சபை சீட்டிழுப்பு முடிவுகள் பின்வருமாறு:

1-வது பரிசு: 1,00,000/-

**51 B 0720**

2 வது பரிசு: 40,000/-

**29 X 0700**

3-வது பரிசு: 10,000/-

**06 W 0254**

ரூபா 1,100/- கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு.

| | |
|---|---|
| 42 A 0388 | 47 A 0686 |
| 01 B 0701 | 03 B 0739 |
| 13 B 0855 | 14 B 0609 |
| 26 B 0074 | 36 B 0001 |
| 37 B 0330 | 44 B 0872 |
| 44 B 0414 | 50 B 01 5 |
| 06 C 0207 | 22 C 0033 |
| 47 C 0905 | (5 D 0858 |
| 10 D 0152 | 15 D 0190 |
| 28 D 0467 | 34 D 0151 |
| 42 D 0434 | 46 D 0033 |
| 10 E 0600 | 37 E 0942 |
| 41 E 0086 | 08 G 0207 |
| 16 G 0[illegible]77 | 26 G 0976 |
| 29 G 0112 | 31 G 0304 |
| 44 G 0871 | 50 G 0822 |
| 06 H 0017 | 36 H 0515 |
| 11 J 0347 | 38 J 0819 |
| 16 K 0431 | 18 K 0849 |
| 45 K 0925 | 08 L 0032 |
| 11 L 0767 | 31 L 0458 |
| 07 M 0854 | 33 M 0304 |
| 23 N 0264 | 41 N 0312 |
| 44 N 0706 | 50 N 0132 |
| 51 N 0647 | 04 O 0035 |
| 15 O 0402 | 22 O 0237 |
| 32 O 0990 | 51 O 0358 |
| 03 P 0079 | 08 P 0282 |
| 14 P 0545 | 22 P 0756 |
| 30 P 0593 | 27 Q 0385 |
| 01 R 0780 | 43 R 0577 |
| .4 R 0445 | 46 R 0930 |
| 49 R 0786 | 50 R 0293 |
| 20 S 0852 | 26 S 0585 |
| 46 S 0416 | 46 S 0515 |
| 07 T 0311 | 10 T 0549 |
| 16 T 0972 | 34 T 0755 |
| 13 U 0054 | 21 U 0894 |
| 30 U 0177 | 30 U 0650 |
| 42 U 0081 | 47 U 0265 |
| 51 U 0162 | 08 V 0848 |
| 38 V 0884 | 48 V 0798 |
| 01 W 0241 | 20 W 0729 |
| 31 W 0572 | 32 W 0364 |
| 34 W 0777 | 05 X 0997 |
| 31 X 0137 | 36 X 0712 |
| 11 Y 0844 | 21 Y 0501 |
| 32 Y 0395 | 37 Y 0501 |
| 45 Y 0573 | 09 Z 0879 |
| 31 Z 0172 | 35 Z 0867 |

[இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.]

---

## வெற்றுச்சாக்கு விற்பனை

வேலணை ப. நோ. கூ. சங்கத்தில் 5000க்கும் மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குள்ளன கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா 5/- கேள்விப் பத்திரப் பணமாகவும், ரூபா 250/- கேள்விப் பணமாகவும் கட்டி கேள்வி விண்ணப்பப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம். மேலும் விபரங்களை அறிய விரும்பின் சங்க அலுவலக நேரத்தில் சங்க அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம். தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் ரூபா 500/- பிணைப் பணமாகக் கட்டுவதுடன் 30-9-77க்கு முன் முழு வெற்றுச்சாக்குகட்குமுரிய பணத்தைச் செலுத்தி சாக்குகளை பெற்றுக்கொள்ளவேண்டும்.

முடிவு திகதி 28-9-77 காலை 10-00 மணி.

சுவீப்பிங் மாவு, பழுதடைந்த வெற்று றம்கள், லொறி ரயர்கள் (பாவித்தது) லொறி றிம்கள் (பாவித்தது)

மேற்படி பொருட்களும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்.
வேலணை,
19-9-1977.

7165

---

## மாநகரசபை யாழ்ப்பாணம் பகிரங்க ஏலவிற்பனை

யாழ். இ. போ. ச. பஸ் தரிப்பு நிலையத்திற்கருகில் பெரியகடை சந்தை வளவில் உள்ள மகோக்கனி மரம் ஒன்று 23-9-77ஆம் திகதி மு. ப. 10-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் பணத்தை உடனடியாகச் செலுத்தி மரத்தை 3 நாட்களுக்குள் வெட்டி அப்புறப்படுத்தவேண்டும்.

க. சிவஞானம்,
மாநகராட்சிமன்ற
ஆணையாளர்

மாநகராட்சிமன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
19-9 77.

7159

---

1973-ம் ஆண்டின் 44ம் இலக்க நீதிநிர்வாகச்சட்டத்தின் 283ம் பிரிவின்கீழான

## இடைக்கால கட்டளை

### இலங்கை குடியரசில் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

காலஞ்சென்ற பொன்னுச்சாமி நாராயணசாமியின் மரண சாதனமெழுதப்படாத சொத்துச்சம்பந்தமாய்:

காலஞ்சென்றவர் நாராயணசாமி [illegible]கம் பெண் சரோஜினிதேவி வல்வெட்டித்துறை
விண்ணப்பகாரி

எதிராக

வலயம்: யாழ்ப்பாணம்.
இல: 207

நாராயணசாமி ஞானத்திலகன்
வல்வெட்டித்துறை
பிரதிவாதி

1973-ம் ஆண்டு 44ம்இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 281ம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட 19-1-1976ம் திகதியிடப்பட்ட விண்ணப்பத்திலுள்ள கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிருபிக்கப்பட்டதென திருப்தியடைந்ததின் பேரில் 30-3-1976 திகதி அல்லது அதற்கு முன் ஏதாவது எதிர்க்காரணங்கள் காட்டினாலன்றி மேற்படி காலஞ்சென்றவரின் விதவையென்றமுறையில் விண்ணப்பதாரியேகாலஞ்சென்றவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு நிர்வாகத்தத்துவப் பத்திரம் பெறுவதற்கு உரிமையுடையவரென்றும் அவ்வண்ணம் அவருக்கு நிர்வாகப்பத்திரம் வழங்கப்படுமென்றும் யாழ்ப்பாணம் நீதிநிருவாக வலயத்தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளையாகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் செயல்பட்டு இத்தால்கட்டளையிடுகின்றேன்.

(ஒப்பம்)
கா. கணபதிப்பிள்ளை,
தத்துவப்பத்திரஅதிகாரி.
யாழ்ப்பாணம்.

காரணங் காட்டுவதற்கான திகதி 1977ம் ஆண்டு ஐப்பசி மீ 7ந் திகதிக்கு நீடிக்கப்பட்டிருக்கின்றது.

(ஒப்பம்)
கா. கணபதிப்பிள்ளை,
தத்துவப்பத்திர அதிகாரி.

7161

---

## இன்று மீண்டும் கூடுவர்

யாழ்ப்பாணம், புதன் கடல் கடந்த தொலைத்தொடர்பு சேவைத்தமிழ்ஊழியர்கள் தமது நிலைபற்றி மீண்டும் இன்று காலை யாழ். வின்ஸர் படமாளிகை மேல்மாடியில் திரு. மு. சண்முகராஜா தலைமையில் கூடி ஆராயவிருக்கின்றனர். (உ)

---

## வரி விளம்பரம்

### தேவை

நாலு பரப்பு முதல் இருபது பரப்பு வரையுள்ள வெறும் காணி அல்லது வீட்டுடன் காணி தேவை. நகரின் பிரதான வீதிகளுக்கு அருகாமையில் இருப்பது விரும்பத்தக்கது. கடிதமூலம் தொடர்புகொள்க. விளம்பர இல:7140, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7141

---

எழுவைதீவு முருகன் கோவிலுக்கு பூசகர் தேவை. விண்ணப்பங்கள் 25-9-77 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விபரங்களுக்கு பொருளாளர் 41/2, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 7162

---

குறைந்தது ஐந்துவருட அனுபவம் உள்ள சுருக்கெழுத்து, தட்டெழுத்து, தமிழில் கணக்கெழுதக்கூடிய பெண் கணக்காளர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். க. நாகமுத்து அன்சன், 48-50, பெரியகடை வீதி. யாழ்ப்பாணம். 7156

---

C. இராசநாயகம் முதலியார் எழுதிய பண்டைய யாழ்ப்பாணம், Ancient Jaffna என்னும் புஸ்தகங்கள் தேவை. விபரங்களுக்கு: T. நடராசா, சட்டத்தரணி, 30, மூன்றும் குறுக்குதெரு, யாழ்ப்பாணம். 7166

---

லேத் வேலை, பிறறிங்வேலை தெரிந்தவர்கள் தேவை. நேரில் வரவும். ராதா மெசின் கம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7167

---

### விற்பனைக்கு

வேலணை மகாவித்தியாலயத்திற்கு அண்மையிலும், பிரதான வீதியோரத்திலும் 5 பரப்புக் காணி வீடு, தென்னையுடன் மின்சார தொடர்பு ஏற்படுத்தக்கூடிய வசதியுடனும் 5 பரப்புக் காணி தோட்டமும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: திருமதி செல்வத்துரை, 10/11, பொலிஸ் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம். 7164

---

உடுவில் அங்கிரெல் கிழக்கு ஒழுங்கையில் மகளிர் கல்லூரிக்கு சமீபமாக வீடுகட்டக்கூடிய 60 பேச்சஸ் காணி விற்பனைக்குண்டு. நல்லதண்ணீர், மின்சார வசதியுள்ள இடம். ஒரு பேச்சஸ் ரூபா 420/-. விபரங்களுக்கு திருமதி K. குணரத்தினம், "கமலஸ்தான்" அங்கிரெல் ஒழுங்கை, உடுவில் 7154

---

வீட்டுடன் 4 பரப்புக் காணியும், 15 பரப்பு வயலும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- 226, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 7158

---

3 ஸ்ரீ 9000 தொடரிலக்கமுடைய வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. 9, (பழைய இல. 7) பழம்தெரு, கந்தர்மடம். புதன், வியாழனில் பார்வையிடலம். 7149

---

## ஹாடி மாணவர் ஆராய்வர்

யாழ்ப்பாணம், புதன் அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதத்தினல் தத்தமது இடங்களுக்குத் திரும்பிய அம்பாறை ஹாடிவளாகத் தமிழ் மாணவர்கள் தமது எதிர்காலநிலை பற்றி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் கூடி ஆராயவுள்ளனர். (கு)

---

## தெப்பத் திருவிழா

யாழ்ப்பாணம், புதன் ஊரிகாவற்றுறை பருத்தியடைப்பு கதிரேசன் கோயிலில் தெப்போற்சவம் சிறப்புற நடைபெற்றது. (உ)



# கருணாநிதிக்கு சிலைஎழுப்ப பெரியார் பெரும் ஆசைகொண்டிருந்தார்

## எம்.ஜி.ஆர். கூற்றுக்கு மணிஅம்மை பதில்

சென்னை, செப். 20

"சென்னையில் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் கலைஞர்மு கருணாநிதியின்சிலை திராவிடக்கழகத்தால் அமைக்கப்படவேண்டும் என்று தி. க. தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. ஆலோசனை மட்டும் வழங்கவில்லை. அதுவே அவரின் மிகப்பெரும் ஆசையுமாக இருந்தது."

இவ்வாறு தி க. தலைவியும் பெரியாரின் துணைவியாருமான திருமதி மணியம்மை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார்.

சென்னையில் பெரியார் சிலை திறப்பு விழாவின்போது தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், பெரியார் சிலைக்கு அருகில் 1975-ல் நிறுவப்பட்ட கலைஞர் மு. கருணாநிதியின் சிலை தொடர்ந்தும் அவ்விடத்தில் இருக்க அனுமதிப்பதா, இல்லையா என்பது குறித்து நீதிமன்றத்தின் தீர்ப்பை நாடவேண்டியுள்ளது என்று தமது பேச்சில் குறிப்பிட்டதற்குப் பதிலளிக்குமுகமாகவே திருமதி மணியம்மை இவ்வறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, பேரறிஞர் அண்ணாவின் உருவச்சிலையை அமைப்பதற்கு இன்னும் ஒரு இடம் கோரி தமிழகஅரசிடம் தி. மு. க மீண்டும் விண்ணப்பித்துள்ளது.

இம்முறை விண்ணப்பித்துள்ள இடத்தில் அண்ணா சிலையை அமைக்க தமிழக அரசு அனுமதி அளிக்கும் பட்சத்தில் இம்மாதம் 25-ம் திகதி தமிழக அரசுக்கு எதிராக நடத்தத்திட்டமிட்டுள்ள ஊர்வலங்களையும் கூட்டங்களையும் ரத்துச் செய்ய தி. மு. கழகம் முடிவுசெய்துள்ளது.



மௌண்ட் ரோட்டில் உள்ள முக்கிய சந்தி ஒன்றில் அண்ணா சிலையை நிறுவ தமிழக அரசிடம் தி. மு. க. அனுமதி கோரிஇருந்ததும் தி. மு. க. குறிப்பிட்ட இடத்தில் சிலையை அமைத்தால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படும் என்று கருத்து தெரிவித்த தமிழக அரசு அனுமதி மறுத்திருந்ததும் தெரிந்ததே. (இ-உ)



## ஹரியானா, தமிழ்நாடு கல்வியமைச்சர்கள் சந்திப்பு

சென்னை, செப். 20

ஹரியானா கல்வியமைச்சர் கேர்ணல் ராம்சிங் தமிழ்நாடு கல்வியமைச்சர் திரு. அரங்கநாயகத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

தமது மாநிலத்தில் இன்னமும் இரு ஆண்டுகளில் கல்வித் திட்டத்தில் மாற்றம் செய்யப்படும் என்று தெரிவித்த ஹரியானா கல்வியமைச்சர் தமிழ் நாட்டுக் கல்வி முறை குறித்துத் தாம் அறிந்து கொள்ளும் பொருட்டே தமிழ் நாடு வந்துள்ளதாகச் சொன்னர்.

ஹரியானா கல்வியமைச்சர் தமிழ்நாட்டின் பல பள்ளிகளுக்கும் சென்று ஆசிரியர்களுடன் உரையாடினர். (உ)

## "இந்தியா தயாரில்லை"

புதுடெல்லி, செப். 20

"இந்திய நாடுகளின் முதலீட்டாளர்களுக்கு கதவுகளைத் திறந்துவிட சில வட்டாரங்கள் முயலுகின்றன. ஆனல் இதனை இந்திய அரசு ஒருபோதும் அனுமதிக்காது. என இந்திய உள்துறை அமைச்சர் சரண்சிங் அறிவித்துள்ளார்.

"முக்கியமாக விவசாய தொழிற்துறையில் அந்நிய மூலதன முதலீட்டாளர்களுக்கு மேலும் இடமளிக்க முடியாது. தற்போது இந்தியாவில் அந்நியக் கம்பனிகள் 1,800 கோடி ரூபாயை முலலீடு செய்தன. இக் கம்பனிகள் ஆண்டுதோறும் 10,000 லட்சம் ரூபாய்களை லாபமாக எமது நாட்டிலிருந்து எடுத்துச்செல்லுகின்றன. அந்நிய முதலீட்டாளர்களை வரவழைக்கும் முயற்சிகளை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது" என அமைச்சர் சரண்சிங் மேலும் கூறியுள்ளார். (உ)

# "என் கணவரை சிறையிலிட இராணுவ நிர்வாகிக்கு அதிகாரமில்லை"

## திருமதி பூட்டோ கோர்ட்டில் மனு

இஸ்லாமாபாத், செப். 20

தமது கணவரான பாகிஸ்தான் முன்னள் பிரதமர் ஜனுப் சுல்பிகார் அலிபூட்டோவைக் கைது செய்து சிறையில் வைப்பதற்கு இராணுவ நிர்வாகி ஜெனரல் ஹக்குக்கு அதிகாரம் கிடையாது என லாகூர் நீதிமன்றத்தில் திருமதி பூட்டோ மனு ஒன்றினைத் தாக்கல் செய்துள்ளார்.

தம் கணவருக்கு எதிரான வழக்கு விசாரணையை நிறுத்திவைக்குமாறும் அவர் இம் மனுவில் கோரியுள்ளார்.

தமது 5 1/2 ஆண்டு ஆட்சிக் காலத்தில் ஜனுப் பூட்டோ செய்ததாகக் கூறப்படும் ஊழல் விசாரணை வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட விருப்பது தெரிந்ததே.

### தற்காலிகத் தலைவி

இதே வேளை ஜனுப் பூட்டோவின் மக்கள் கட்சியின தற்காலிகத் தலைவராக திருமதி பூட்டோ தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (உ)

## பிரிட்டிஷ் அமைச்சர் ரஷ்யா செல்கிருர்

லண்டன், செப். 20

பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் திரு. டேவிட் ஓவன் அக்டோபர் மாதம் 9ம் திகதி முதல் தடவையாக உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றினை சோவியத் யூனியனில் மேற்

(4-ம் பக்கம் பார்க்க)

# எம்ஜிஆர்.- நெடுஞ்செழியன் கழக இணைப்புக்கு அங்கீகாரம்

சென்னை, செப். 20

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகப் பொதுக்குழு இலங்கைத் தமிழர் தலைவர் மூதறிஞர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியுளளது.

அ. இ. அ. தி. மு க. பொதுக்குழுவின் இரண்டுநாள் கூட்டத் தொடர் நேற்று சென்னையில் ஆரம்பாமாகியது.

ம. தி. மு. க. அ இ. அ. தி. மு. க. வுடன் இணைவதை பொதுக்குழு ஏற்றுக்கொண்டது. மற்ற அரசியல் அமைப்புகளும் தம்முடன் சேர்ந்துகொள்ள விரும்பினல் அதற்குரிய அதிகாரத்தை பொதுச் செயலாளர் திரு. எம். ஜி. இராம்ச்சந்திரனிடம் வழங்குவதெனவும்பொதுக்குழு முடிவு செய்தது.

தமிழ்நாடு முன்னள் எதிர்க் கட்சித்தலைவர் திரு. கருத்திருமன், திரு. ஈ. வெ. கி. சம்பத், திரு ஏ. கே. கோபாலன் ஆகியோரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (உ)

## தேர்தல் பிரசாரத்துடன் வன்முறையும் ஆரம்பம்

லாகூர், செப். 20

தேர்தல் பிரசாரங்கள் பாகிஸ்தானில் ஆரம்பமாகியதனை அடுத்து லாகூரில் துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன என அறிவிக்கப்படுகிறது.

தற்போது இராணுவ நிர்வாகத்தினல் மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள முன்னள் பிரதமர் ஜனுப் சுல்பிகார் அலி பூட்டோவின் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே லாகூரில் நடைபெற்ற இத்துப்பாக்கிச் சண்டைகளில் ஒருவர் பலியானர். மூவர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானில் அக்டோபர் மாதம் 18-ம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. (உ)

விலைவாசி உயர்வு:

## தமிழக காங்கிரஸ் ஊழியர் கண்டன ஊர்வலம்

சென்னை, செப். 20

விலைவாசி உயர்வைக் கண்டித்து தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர்கள் தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் கண்டன ஊர்வலங்கள் நடத்தினர். கலப்படம், விலைவாசி உயர்வு என்பனவற்றை அகற்ற மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரும் மகஜர்களை இவர்கள் சேலம், வேலூர், வட ஆற்காடு, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் சமர்ப்பித்தனர். (உ)

## சட்டமூலம் சிறுபான்மையினர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

### தமிழக சட்டமந்திரி கூறுகிருர்

சென்னை, செப். 20

'பெரும்பான்மையினர் சிறுபான்மையினருக்கு உதவ முன்வரவேண்டும்' என்று தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி கூறினர்.

சென்னையில் நடைபெற்ற முஸ்லிம் வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னர்.

'சிறுபான்மையினரை எவ்வகையிலும் புறக்கணிக்கக் கூடாது' என்றும் ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

தமிழ் நாடு சட்ட மந்திரி திரு. நாராயணசாமி முதலியார் பேசுகையில், 'சிறுபான்மையினர் உரிமைகள் சட்டம் மூலம் பாதுகாக்கப்படவேண்டும்' என்று கூறினர்.

மாநில அமைச்சர் ராஜா முகமதுவும் பேசினர். (உ)

## அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் - தயான் சந்திப்பு

### மத்திய கிழக்கு பற்றிப் பேசினர்

வாஷிங்டன், செப். 20

இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் ஜெனரல் மோஷே தயான் வாஷிங்டனில் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் வான்சைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

மத்திய கிழக்குப் பிரச்னை

(4-ம் பக்கம் பார்க்க)

# பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வு நிதி

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கான பிரஜைகள் குழுவின் நிதிக்குப் பொதுமக்களிடமிருந்து இதுவரை ரூபா. 52,488-39 சதம் கிடைத்துள்ளது இந்நிதிக்கு பணம் செலுத்த விரும்புகின்றவர்கள் இலங்கை வர்த்தக வங்கி கணக்கு இல. 3840-க்கு நேராகச் செலுத்தலாம் அல்லது பொருளாளர்களான திரு. லங்கா நேசையா அல்லது சிமாஸ் இண்டஸ்றீஸ் நிர்வாக இயக்குநர் திரு. ஆர். ஜே. குணரத்தினம் ஆகியோரிடம் வழங்கலாம்.

| | |
|---|---|
| ஏற்கனவே சேர்ந்த நிதி | 50,767-39 |
| துறையூர் ஐயனார், திருவள்ளுவர் சனசமூகநிலையங்கள்—வேலணை | 751-00 |
| பே. சின்னத்தம்பி—புலோலி | 201-00 |
| ஆர். உருத்திரா, பருத்தித்துறை | 100-00 |
| கலாநிதி கே. கனகரத்தினம், கந்தர்மடம் | 100-00 |
| மு. இளையதம்பி, கொட்டடி | 25-00 |
| யாழ்பாண மெடிகல் லபோரட்டரி, சுண்டிக்குளி | 100-00 |
| திருமதி. ஜே. எம். ஜீ. சாமுவேல், சுண்டிக்குளி | 50-00 |
| க. பாலகிட்ணர், சாவகச்சேரி | 100-00 |
| வ. இராசையா, கொட்டாஞ்சேனை | 55-00 |
| திருமதி. ரி. தம்பிஐயா, யாழ்ப்பாணம் | 25-00 |
| சுண்டிக்குளி வண. ஜே. ஜே. ஞானப்பிரகாசம் ஊடாக | 44-00 |
| நல்லூர், வண. ஜே. ஏ. சரிவானந்தன் ஊடாக | 170-00 |
| மொத்தம் ரூபா. | 52,488-39 |

# கிராமந்தோறும் கைத்தொழில் நிறுவனங்கள்

## தமிழர் நலன்புரி இயக்கம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்

தமிழர் நலன்புரி இயக்கம் வடபகுதியில் பலகைத்தொழில் நிறுவனங்களை கிராமந்தோறும் நிறுவ நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்ப் பகுதியில் உள்ள சகல கிராமங்களும் தமது சுய தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய விதத்தில் பொருளாதார அபிவிருத்தியை கருத்திற் கொண்டே தமிழர் நலன்புரி இயக்கம் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது என்று இயக்க அமைப்புச் செயலாளர் திரு. செ. செல்வகுமார் தெரிவித்தார்.

இன்னும் இரண்டு மாதங்களில் ஆறு சிறு கைத்தொழிற்சாலை நிறுவி இளைஞர்களுக்கு யுவதிகளுக்கு வேலைவாய்ப்புடன் பயிற்சியும் அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

வண்ணார்பண்ணையில் ஒட்டுப்பலகையில் பொருட்கள் உற்பத்திசெய்யும் தொழிற்சாலை, தெல்லிப்பளையில் 'பட்டிக்' துணி தயாரிக்கும் நிறுவனம், எழுதுமட்டுவாளில் தும்புத்தொழிற்சாலை, உடுவிலில் கண்ணடிப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை வட்டுக்கோட்டையில் பனம் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலை, கிளிநொச்சியில் சவர்க்காரத் தொழிற்சாலை ஆகியனவே அமைக்கப் படவுள்ளன.

இத் தொழிற்சாலைகள் பொதுமக்கள் ஸ்தாபனமாக இயங்கும் என்றும் அவற்றின் மூலம் கிடைக்கப்பெறும் இலாபத்தைக் கொண்டு மேலும் பல தொழிற்சாலைகளை நிறுவுவதே இந்த இயக்கத்தின் நோக்கம் என்றும் திரு. செல்வகுமார் கூறினார். (இ)

## இடைக்காடு கொலைவழக்கு

# விசாரணை நடுவில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

இடைக்காடு கொலை வழக்கில் விசாரணை நடுவில் எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.

இவ்வழக்கு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 76 மே 16-ம் திகதி இடைக்காட்டில் செல்லையா சுப்பிரமணியம் என்பவர் பாரதியை கொலைசெய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் [சட்டத்தரணி செல்வி வின்சென்ட் [அனுசரணையுடன் ஆஜரானுர் அரசதரப்பில் சட்டத்தரணி க. ஜெயக்குமார் வழக்கை நடத்தினார்.

விசாரணை நடுவில் ஜூரி சபையினர் விசாரணையை தொடரவிரும்பவில்லை யெனக் கூறியதைத் தொடர்ந்து நீதிபதி எதிரியை விடுதலைசெய்தார். (க)

## 26-ந் தேதி வரை றிமாண்ட்!

யாழ்ப்பாணம், புதன்

ஊரடங்குச்சட்ட நேரத்தில் சுதுமலையைச் சேர்ந்த குணரெத்தினம் என்பவரது வீட்டில் 2000 ரூபாய் பணம் உட்பட 28,000 ரூபாய் பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்ததாக சந்தேகத்தின்பேரில் ஆனைக்கோட்டை பொலிசாரால் கைதுசெய்த மூவரையும் இம்மாதம் 26ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி திரு. கே. வி. நவரத்தினம் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகத்தின்பேரில் எஸ். மதிவதனன், எஸ். சுந்தரராஜா, ஆர். பத்மராஜா ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி இவர்களை இம்மாதம் 26ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (கெ)

## வேலைக்குத் திரும்புவதில்லை என சுங்க ஊழியர் முடிவு

யாழ்ப்பாணம், புதன்

நாட்டில் நிலைமை சீராகும் வரை வேலைக்குத் திரும்புவதில்லையென பாதிக்கப்பட்ட சுங்கப் பகுதி ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர்.

யாழ். சுங்க திணைக்களத் களத்தில், பாதிக்கப்பட்ட சுங்க உத்தியோகத்தர் திரு. க. விக்னேஸ்வரராசா தலைமையில் பாதிக்கப்பட்ட சுங்க ஊழியர் கூட்டம் நடைபெற்றது.

சுங்க அதிகாரி திரு. சிவசுப்பிரமணியம் தனக்கும் தமது மகளுக்கும், கலவரத்தின் போது ஏற்பட்ட நிலைமையை உருக்கமாக தெரிவித்தார்.

திரு. க. விக்னேஸ்வரராசா கூறியதாவது:

நாங்கள் எல்லாரும் அரசாங்க உத்தியோகத்தர்கள் எப்பொழுதும், எங்கும் சேவை செய்யத் தயாராக இருப்பவர்கள். ஆனால் தென்பகுதியில் நடந்த வன்செயல்களைக் கேட்கும் போது அங்கு எப்படி செல்ல முடியும்?

பிஷப் இல்லத்தில், பிஷப் நாணயக்காரா தலைமையில் வந்த குழுவை டாக்டர் கே. பாலசிங்கம் தலைமையில் சென்ற பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சந்தித்தனர்.

தமிழ் ஊழியர்களுக்கு நடந்தவற்றை அக்குழுவிடம் எடுத்துக் கூறினார்கள் இந்தநிலையில் கொழும்பு செல்லவேண்டாம் என பிஷப் நாணயக்காரா தெரிவித்தார்.

கொழும்பில், தமிழ் பெண்கள் சந்தைக்கு சென்று சாமான் வாங்க முடியாத நிலையில் இருப்பதாக வணபிதா பாலசூரியா, அச்சமயம் தெரிவித்தார். தமிழ் குடும்பத்தினருக்கு, சிங்களவர்களே சாமான்கள் வாங்கி கொடுப்பதாகவும் அவர் கூறினார். இந்த நிலையில் நாம் எப்படி செல்ல முடியும். நிலைமை சீராகும்வரை, போகக் கூடாது.

## பி.ஸி-ஸி. நிறுவனத்தில் உற்பத்தி அதிகரிப்பு

கொழும்பு, செவ்.

பி. ஸி. ஸி. நிறுவனத்தின் சவர்க்கார உற்பத்தி அதிகரித்துள்ளது.

அரசாங்கம் இந்நிறுவனத்தைப் பொறுப்பேற்றதன்பின் தொழிலாளர்கள் உற்சாகத்துடன் பணியாற்றியதே இவ்வுற்பத்தி அதிகரிப்புக்குக் காரணம் என்று மேற்படி நிறுவனத்தின் தகுதிவாய்ந்த அதிகாரி தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இந்நிறுவனத்தில் 623 தொன் சவர்க்காரம் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் அவர் சொன்னார். (உ)

# கப்பல் பயிற்சிக்கு இனி கட்டணம் இல்லை

## அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, செவ்.

கப்பல் பயிற்சிக்கு அறவிடப்பட்டுவந்த 1200 ரூபா கட்டணப்பண முறை ஒழிக்கப்படும் என்று கப்பல் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திருமதி விமலா கன்னங்கரா கூறியுள்ளார்.

திருகோணமலையில் கப்பல் பயிற்சி பெறுவோர் 6 மாத பயிற்சி முடிந்தபின்னர் வெளிநாட்டில் வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ளவும் வசதியளிக்கப்படும் என்றும் அமைச்சர் சொன்னார்.

கடற்றொழில் கூட்டுத்தாபனம், கடற்படை ஆகியவற்றின் ஒத்துழைப்பு இவ்விடயத்தில் நாடப்படும் என்றார் அவர். (உ)

## உடுவில்

# கொலை முயற்சி வழக்கு இரு எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

உடுவில் கொலைமுயற்சி வழக்கில் 2-ம் எதிரிக்கு 250 ரூபா அபராதமும், 4-ம் எதிரிக்கு 100 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. 1-ம், 3-ம் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னியில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 75 ஏப்ரல் 13ம் தேதி உடுவில் செல்லத்துரை மகானந்த, சிவலிங்கத்தைக் கொலைசெய்ய முயற்சித்ததாக கு. நாகலிங்கம், தா. சோதிலிங்கம், இ. சஜித், செ. சந்திரகுமார் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம், 2-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார். 3-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். 4-ம் எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆஜரானார்.

எதிரிகளுக்காக அரசினால் சட்டத்தரணி செல்வி நமசிவாயம் நியமிக்கப்பட்டிருந்தார். அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினார்.

2-ம் எதிரியும், 4-ம் எதிரியும் குறைந்த குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள். இதைத் தொடர்ந்து 1-ம், 3-ம் எதிரிகள்மீதான குற்றச்சாட்டுகள் வாபஸ்பெறப்பட்டு, விடுதலை செய்யப்பட்டனர்.

### ஆசிரியருக்குக் கடிதம்

## அநாமதேய வெளியீட்டுக்கு நாம் பொறுப்பல்ல

'இடம்பெயர்ந்த ஊழியர் வட்டமென்னும் பெயரில் வெளியிடப்பட்ட இரண்டு துண்டுப்பிரசுரங்கள் தினமுரசு கடித உறையில் வந்தவண்ணம் இருக்கின்றன. அனுப்புபவர்கள் தங்கள் விலாசத்தையோ பெயரையோ இதில் குறிப்பிட்டிருக்கவில்லை. பல தினசரிப் பத்திரிகைகளில் இப்பிரசுரம் வெளிவந்துள்ளன. எங்கள் கழகம் இவ்வுத்தியோகத்தர்கள் யாரென அறியமுடியாமலுள்ளது. அவர்களின் நோக்கம் உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களின் நலன் கருதிச் செயல்படுகின்றதாவென அறியஆவலாய் இருக்கின்றது. இதைவிட இவ்வியக்கத்தினால் வெளியிடப்படும் அறிக்கைகள்எவற்றுக்கும் எங்கள் கழகம் பொறுப்பல்லஎன்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பி. சண்முகசாமி

செயலாளர்,
பாதிக்கப்பட்ட
தமிழ் ஊழியர் கழகம்,
நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.




## 21—9—77 புதன்

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

6-05 சைவ நற்சிந்தனை க. சொக்கலிங்கம், 6-10 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-50 துதிப் பாடல், 7-00 இசைக்கோவை. 7-35 பாட்டு பூமணி இராசரத்தினம், 8-05 புல்லாங்குழல் வீணை நிலைய வித்துவான்கள், மாலை 6-20 பஜனைப்பாடல்கள், 6-30 கத்தோலிக்க நிகழ்ச்சி புளோறி. 6-45 நாடகம் "ஏழைக்கு ஒரு ஆசை" எழுதியவர்: பாலாம்பிகை நடராசா, 7-02 வாழ்வும் வளமும். காவலூர் இராசதுரை, 7-35 புதிரும் பதிலும். திருநாவுக்கரசு, 8-10 இஸ்லாமிய கீதம், 8-20 முஸ்லிம் உலகச் செய்திகள், 8-30 நூருல் இஸ்லாம், 9-30 நாகசுரம் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை, 10-30 உங்கள் விருப்பம், திரைப் பாடல்கள். (கெ)

## பிரிட்டிஷ்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவிருக்கிறார்.

கடந்த ஆண்டு சோவியத் யூனியன் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிகோ லண்டனுக்கு விஜயம்செய்தபோது இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

திரு. ஓவனும், திரு. குரோமிகோவும் மத்திய கிழக்குப் பிரச்சினை, தெற்காசிய விவகாரம், அணுக்கதிரியக்கத்தடை முதலியவைபற்றி கலந்துரையாடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## அமெரிக்க...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான ஜெனிவா மாநாட்டை இவ்வாண்டு இறுதிக்குள் கூட்டுவது தொடர்பாக இப்பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப் பட்டதாகத் தெரிகிறது.

ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டருடனும் ஜெனரல் தயான் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

ஐ. நா. பொதுச்சபையின் கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகும் போதும் ம. கி. பிரச்சினை பிரதானமாக எடுத்துக் கொள்ளப்படவிருந்தது.

'வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளில் கடந்த இருவருட காலத்தில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு ஒரு புதிய நியாயமான சர்வதேச அமைப்பை உருவாக்கும் பணியில் ஐக்கிய நாடுகள் தொடர்ந்து ஈடுபட வேண்டும்.'

ஐக்கிய நாடுகளில் உள்ள நிரந்தர அமெரிக்கப் பிரதிநிதி அன்றூ யங் இந்தக் கருத்தை வெளியிட்டார். (உ)

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 2-45, 6-45
முத்துராமன்-ஜெயா
**கனிமுத்து பாப்பா**

**பூலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி பி.ப.2-30, 7-00
சிவாஜி - மஞ்சுளா
**மன்னவன் வந்தானடி**

**RIO**
(Jaffna)
Grand Release
Daily 10-30, 4-45, 7-15 p. m. only
Action packed-Suspense filled
Thrilling Drama
Robert Shaw - Robert Ryan in
**CUSTER OF THE WEST**
(Scope Color. Also News-Opening of Parliament)

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராணி**
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 9-30, பிற்பகல் 1-30, 5-30
தேவரின்
**பெண் தெய்வம்**

**மனோஹரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30 6-00
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
**உழைக்கும் கரங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, 2-00, மாலை 5-00, மணி
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
**அன்னக்கிளி**

**வெலிங்டன்** (யாழ் நகர்)
தினசரி10-30, 2-30 மாலை6-00
விஜயகுமார் — ஜெய்சித்ரா
**தாய் இல்லாக் குழந்தை**

**விடோ**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
போன்: 7698
ஜெய்சங்கர் - சுஜாதா
**நீ ஒரு மகாராணி**

**சாந்தி**
யாழ். நகர்
போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30 காட்சிகள்
ஃ முத்துராமன் ஃ சிவகுமார்
ஃ ஜெயசித்ரா ஃ சோ நடித்த
**எங்கம்மா சபதம்**
— உன்னத உணர்ச்சிக் காவியம் —

**ராஜா**
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
போன்: 7180
சசிகுமார் - நிர்மலா - சந்திரபாபு நடித்த
**அவள்** (கலர்) [புதியபிரதி]

**Regal** (Jaffna)
Daily at 10-30 a.m., 4-45 & 7-00 p.m.
DICK EMERY
in
**"OOH... YOU ARE AWFUL"**
(Color)


## ஆர்த்ராதரிசன யாத்திரை ஏற்பாடு

கொழும்பு, செவ்வாய்

எதிர்வரும் மார்கழி ஆர்த்திரா தரிசனத்திற்கு யாத்திரீகர்களை இந்தியாவிற்கு அழைத்துச்செல்ல அகில இலங்கை இந்துமா மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

மார்கழி மாதத் திருவாதிரையை முன்னிட்டு 60 யாத்திரீகர் இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். இவர்களில் 1977ம் ஆண்டு ஆனி உத்தரத்தின்போது விண்ணப்பித்துத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மிகுதி இடங்களுக்கு இவ்வசதியைப் பயன்படுத்தி யாத்திரைசெல்ல விரும்புபவர்கள் கடந்த 7 ஆண்டுகளில் இந்தியா யாத்திரை சென்றிராதோராயும், விண்ணப்பதாரருக்கு யாத்திரைக்காக உதவிசெய்ய வெளிநாடுகளில்உறவினரோ, அன்றி நண்பர்களோ இல்லாதவராயும் இருத்தல்வேண்டும். வயது முதிர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு கணவன் மனைவியாகியோருக்கல்லாமல் பிள்ளைகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது.

செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியின் அனுமதி வழங்கல் கடிதம்மட்டும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரருக்கு அனுப்பப்படும். யாத்திரீகர்கள் தாமாகவே பிரயாண ஒழுங்குகளையும், மற்றும் சேவைகளையும் செய்துகொள்ளவேண்டும். (கா)

•••

## ஊராட்சி மன்றத் தேர்தலும் பேரவையும்

யாழ்ப்பாணம், புதன்

'ஊராட்சி மன்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டார அடிப்படையில் வேட்பாளர்களை நிறுத்தாமல்ஊராட்சி மன்றத் 'தலைவர்' என்ற அடிப்படையில் மட்டுமே கூட்டணி வேட்பாளர்களை நிறுத்தவேண்டும்.

தமிழ் இளைஞர் பேரவையின் மத்திய செயற்குழு உறுப்பினர் உட்பட பொறுப்புள்ள நிர்வாகப் பதவிகளை வகிக்கும் பேரவை உறுப்பினர்கள் ஊராட்சி மன்ற தேர்தலில் வேட்பாளராக நிற்கக் கூடாது என்றும் அப்படி வேட்பாளர்களாக நிற்பவர் பேரவைப் பொறுப்புகளிலிருந்து விலகியதாக கருதப்படுவர் என்னும் தீர்மானங்கள் கடந்த மாதம் நடைபெற்ற இளைஞர் பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இது இவ்வாறிருக்க சிலபத்திரிகைகளில் (ஈழநாடு அல்ல) தவறான செய்திகளை வெளியிட்டு தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்புக்கு தவறான கருத்தைத் தெரிவிப்பதாக யாழ் இளைஞர் பேரவை அமைப்புச் செயலாளர் திரு. மாவை சேனாதிராஜா வருத்தம் தெரிவித்துள்ளார்.

தமிழ் இளைஞர் பேரவைக் கூட்டங்களில் தனிப்பட்ட உறுப்பினர்களுக்கெதிராக எந்த பிரேரணைகளும் எடுக்கவில்லையென திரு. மாவை சேனாதிராஜா தெரிவித்தார். (கெ)

## ஈழத்—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பேரவை கேட்டுக்கொண்டுள்ளது.

"உலகம் முழுவதையும் வெட்கத்திலும் வேதனையிலும் ஆழ்த்தியுள்ள இந்தப் பிரச்னையில் அண்டைநாடான இந்தியா உடனடியான அக்கறை காட்ட வேண்டியது மிகமிக அவசியம் என்று அறிவியக்கப் பேரவை வலியுறுத்த விரும்புகிறது"

"நிதியமைச்சரின்

## வெளிநாட்டு விஜயம் பலன் அளித்துள்ளது"

— பிரதியமைச்சர்

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்படவிருக்கும் சம்பள அதிகரிப்பின் மூலம் மீனவர்களும் விவசாயிகளும் கூட நன்மையடைவார்கள் என்று பதில் நிதிஅமைச்சர் திரு. வெஸ்டஸ் பெரேரா கூறினார்.

நிதியமைச்சர் திரு. ரொனி டி. மெல்லின் தற்போதைய வெளிநாட்டு விஜயம் பல நன்மைகளை அளித்துள்ளது என்றும் அவர் சொன்னார். (உ)

## நெசவுத் தொழில் வளர்ச்சிக்கு அரசின் புதிய திட்டம்

கொழும்பு, செவ்வாய்

நெசவுத் தொழில் அபிவிருத்திக்கு அரசு புதிய திட்டம் ஒன்றினைச் செயற்படுத்தவிருக்கிறது.

நெசவுத் தொழிலாளருக்கு பல நன்மைகள் அளிக்கும் வகையில் இத்திட்டம் அமையும் என்று புடவைக் கைத்தொழில் அமைச்சர் திரு விஜயபால மெண்டிஸ் கூறியுள்ளார்.

நெசவுத் தொழிலுக்கான நூலை நேரடியாக இறக்குமதி செய்வதற்கு உற்பத்தியாளர்களுக்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று கூறிய அமைச்சர் நூலைப்பெற முடியாதவர்களுக்கு தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் வசதிசெய்துகொடுக்கும என்றும் சொன்னார்.

சிறந்தரகப் புடவைகள் மக்களுக்குக் கிடைக்கும் பொருட்டே இத்திட்டம் அமுல்செய்யப்படுகிறது என்றும் சிறந்தரகப் புடவைகளை ஏற்றுமதி செய்யவும் ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். கைத்தொழில் திட்டத்தின் மூலம் மீனவர்களும், விவசாயிகளும் நன்மை பெறவும் முடியும் என்றார் அமைச்சர். (உ)

## தமிழ் ஊழியருக்கு அரசு இதுவரை உதவவில்லையாம்!

யாழ்ப்பாணம், புதன்

வன்முறையினால் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் எவருக்கும் அரசுஇதுவரை எதுவித உதவியும் செய்யவில்லை. இந்நிலையில் எம்மை வேலைக்கு வரும்படி அழைப்பது எமது நிலையை அரசு உணரவில்லை என்பதை எமக்கு உணர்த்துகிறது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழக கணக்காய்வுத் திணைக்கள ஊழியர் சங்கக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. எஸ் இரத்தின சபாபதி கூறினார்.

திரு. இரத்தினசபாபதி மேலும் பேசுகையில் கூறியதாவது:

நமது சொந்த மண்ணில் கூட எமக்குப் பாதுகாப்பில்லை யாழ்ப்பாணத்திலேயே நாம்பயங்கர சூழ்நிலையிலேயே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். யாழ். நகரில் உள்ள சிலைகள் கூட உடைக்கப்பட்டுள்ளன. அவைகள் என்ன குற்றம்செய்தன? இந்நிலையில் எம்மால் எப்படி சிங்களப்பகுதிகளில் வேலைசெய்யமுடியும்?

நாங்கள் எங்கள் வேலையை விட்டுவரவில்லை. அதே நேரத்தில் நாங்கள் வேலைக்குபோக மாட்டோம் என்றும் கூறவுமில்லை. நாம் வேலைசெய்த இடங்களில் எங்களை வேலை செய்யமுடியாத சூழ்நிலையை காடையர்கள் உருவாக்கினார்கள். எங்கள் சொத்துகளுக்கு மட்டுமின்றி எங்கள் உயிர்களுக்கே இன்னல் விளைவிக்கமுனைந்தார்கள். இந்தப் பயங்கரச் சூழ்நிலையால் நாங்கள் முகாம்களுக்குச் சென்று கப்பல்மூலம் இங்கு அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளோம். நாங்கள் வேலைக்கு திரும்பிச் செல்வதற்கு அரசாங்கம் எவ்வாறு பாதுகாப்பு அளிக்க முன்வந்துள்ளது எனத் திட்டவட்டமாகக் கூறவேண்டும். பாதுகாவலர் முன்நிலையிலேயேநாம் பாதிக்கப்பட்டோம் இனி எங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பவர்கள் யார் என்பதை நாம் முதலில் அறியவேண்டும்.

கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் திரு. முத்துலிங்கம் பேசுகையில், பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகத்தின் தாய்ச் சங்கத்தின் தீர்மானத்தின்படி அனைவரையும் நடக்க வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் இறுதியாக தாய்ச்சங்கத்தின் தீர்மானங்களின்படி பாதிக்கப்பட்டவர்களின் பிரச்னைகளை அரசாங்கம் பரிசிலனை செய்யும் வரைக்கும் வேலைக்குப்போவதில்லை என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (இ)

## "தண்டிக்கப்படும்வரை வேலைக்குத்திரும்புவதில்லை'

யாழ்ப்பாணம், புதன்

அரசு பாரபட்சமற்ற விசாரணையை நடாத்தி குற்றவாளிகளை தண்டிக்கும் வரை வேலைக்கு திரும்புவதில்லையென பாதிக்கப்பட்ட மின்சாரசபை ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர்.

சுன்னாகம் மின்சார சபை காரியாலயத்தில் நேற்றுக்காலை நடந்த கூட்டத்தில் பாதிக்கப்பட்ட மின்சாரசபை ஊழியர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

உயிர், உடமைகள் இழந்ததற்கு தகுந்த நிவாரணம் வழங்கப்படவேண்டும்

தாக்குதலுக்குப் பின் எஞ்சியிருக்கும் உடைமைகளை, இங்கு கொண்டுவருவதற்கு அரசு ஏற்ற ஒழுங்குகளை செய்ய வேண்டும்.

பாதிக்கப்பட்ட ஊழியர்களை, கூடியவரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் வேலைக்கு அமர்த்த வேண்டும். அப்படி வேலைக்கு அமர்த்த முடியாத பட்சத்தில் அவர்கள் மீண்டும் வேலைக்கு போகாதவிடத்து, தேசிய அரசு பேரவை உறுப்பினர் போல் இளைப்பாறக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

அரசு ஊழியர் அல்லாதவர்களுக்கு சகாய நிதியுடன் நஷ்ட ஈடாக கணிசமான தொகை வழங்கவேண்டும்

பாதிக்கப்பட்டவர்களின் பிள்ளைகள் அவர்களின் தற்போதைய வசிப்பிடத்திற்கு அருகாமையில் கல்விகற்க வசதி செய்யவேண்டும். (க)


**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

**மணிவாக்கு**

சிப்பி முத்துச் சினைப்படும் போதும், மூங்கில் முத்தை உண்டாக்கும் போதும், வாழை குலை தள்ளும்போதும், ஆண்களோ பிற பெண்கள் மீது மனம் வைக்கும் போதும் அழிய ஆயத்த மாகின்றார்கள்.

—நல்வழிச்சாரம்

ஈழநாடு
The Eelanaadu

## அகதிகள் பிரச்னை

சமீபத்திய கலவரங்களினுல் பாதிக்கப்பட்டு வீடு வாசல்களையும், உடைமைகளையும் இழந்து உயிரைக் காப்பாற்றுவதற்காகப் பல இடங்களிலும் தஞ்சமடைந்தவர்கள் சில பகுதிகளில் அகதி முகாம்கள் அமைத்து தஞ்சமளிக்கப்பட்டனர்.

நிலைமை ஓரளவு சீரடைந்து வந்ததைத்தொடர்ந்து சிலர் வேறு பாதுகாப்பான இடங்களுக்கும் மற்றும்சிலர் தமது பழைய இடங்களுக்குச் செல்லத்தொடங்கினர். இதனுல் அகதி முகாம்கள் பலவும் மூடப்படத்தொடங்கின.

வெளியூர்களில் வியாபாரத்திலும் அரசாங்க சேவையிலுமிருந்தவர்கள் கொழும்பிலும் மற்றும் சில முகாம்களில் தஞ்சமடைந்திருந்தனர். இவர்கள் தமது சொந்த இடமான வடக்குக்கும் கிழக்குக்கும் அனுப்பப்பட்டதும் சிலமணி நேரம் மட்டுமே இப்பகுதிகளில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்தனர். இவர்கள் அகதி முகாம்களில் நீண்ட காலத்துக்கோ நிரந்தரமாகவோ தங்கியிருக்கவேண்டிய அவசியமில்லை. இவர்களை அகதிகள் என்று சொல்லவும் முடியாது. இவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று தங்கியிருந்த பின் இன்று படிப்படியாகப் பழைய இடங்களுக்குத் திரும்பிச்செல்லத்தொடங்கியிருக்கின்றனர்.

இத்துடன் அகதிகள் பிரச்னை நீங்கிவிடவில்லை.

நாடு பழைய நிலைமைக்குத் திரும்பி விட்டதாகவும் அசம்பாவித சம்பவங்கள் எதுவும்புதிதாக நிகழவில்லையென்றும் உயர் அதிகாரிகளின் அறிக்கைகள் தெரிவிக்கலாம்

ஆனுல் தோட்டத்தொழிலிலும் வேறு சிறிய சிறிய தொழில்களிலும் ஈடுபட்டு வாழ்க்கையை ஓட்டிக்கொண்டு வந்த பலருக்குச் சொந்தத்தில் ஓர் அங்குல நிலம் கூட இல்லை. இந்த நாட்டிலேயே பிறந்து வளர்ந்தாலும் இந்த நாட்டில் எந்தப் பகுதியிலும் உரிமை கொண்டாட முடியாத இந்திய வம்சாவளியினர் அவர்கள். இந்தியாவில் கூட இவர்களுக் உரிமை கொண்டாட முடியுமா என்பது சந்தேகம்.

இத்தகைய மக்கள் இன்னமும் மலையகப் பகுதிகளிலிருந்து தினமும் கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் பஸ்களிலும் ரயில்களிலும் அகதிகளாக வந்து தஞ்சம் கோருகின்றனர்.

இந்த முகாம்களில் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகின்றது. தொற்றுநோய் ஆபத்தும்தலைகாட்டத்தொடங்கியுள்ளது. இந்த அகதிகளின் உணவு, உடை, சுகாதார வசதிகளைக் கவனிக்கவேண்டியது உடனடிப் பிரச்னை.

இவர்களை மீண்டும் அவர்களுடைய இடங்களுக்கு அனுப்புவதா அல்லது அவர்களுக்கு இருப்பிட வசதியும் வேலைவாய்ப்பு வசதியும் அளித்துப் புனர்வாழ்வளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவதா என்பது அடுத்த பிரச்னை.

அகதிகள் பிரச்னையும் அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் பிரச்னையும் உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மக்களின் பிரச்னைகளை நன்கு உணர்ந்தவர்தான் அமைச்சர் பிரேமதாசா. ஆற்றலும் அனுபவமும் உள்ளவர் அவர்.

அமைச்சரும் அதிகாரிகளும் என்னதான் ஆற்றலும் அனுபவமுள்ளவர்களானுலும் இலங்கையின் சரித்திரத்தில் இப்போது போன்று இந்த அளவுக்கு அகதிகள் பிரச்னை எப்போதும் தோன்றியதில்லை.

இந்திய வம்சாவழியினர் சம்பந்தப்பட்டிருப்பதால் அகதிகள் பிரச்னைகளில் நல்ல அனுபவம் பெற்ற இந்தியாவும் இதுபோன்ற பிரச்னைகளில் உதவியளித்து வரும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கமும் இலங்கையில் மலையகம், வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஸ்தாபனங்களையும் கொண்ட குழுவொன்றை அரசாங்கம் நியமித்தால் இந்த பிரச்னைகளுக்கு விரைவான சுலபமான நியாயமானதீர்வுகிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

# துப்பாக்கி ஏந்திய குண்டர்களுடன் வந்தாராம் இந்திரா காந்தி

## அமைச்சர் ராஜ்நாராயண் அதிர்ச்சித்தகவல்

புதுடில்லி, செப். 20

ரேபரேலியில் நடைபெற்ற தமது பொதுக்கூட்டத்திற்கு முன்னுள் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி குண்டர்களை அழைத்துவந்தாராம்.

அவர் மேடையை நோக்கிச் சென்றபோது அவரைச்சுற்றி துப்பாக்கிகள் முதலான ஆயுதங்கள் ஏந்திய குண்டர்களும் சென்றுர்களாம்.

மேற்படி அதிர்ச்சித் தகவல்களை பாரத சுகாதார நலஅமைச்சர் திரு. ராஜ்நாராயண் வெளியிட்டுள்ளார்.

திருமதி காந்தியின் ரேபரேலித்தொகுதியில் அவர் பேசிய கூட்டம் ஒன்று குழப்பத்தில் முடிந்தது தெரிந்ததே.

ரேபரேலித் தொகுதிக்குச் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டுவிட்டு திரு.ராஜ்நாராயண் திரும்பும்வழியில் லக்னோவில் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது தான் அவர் இத்தகவல்களை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: திருமதி காந்தி தமக்குத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியினுல் உண்டான சங்கடத்தை சமாளிக்க நாட்டில் பதட்ட நிலையை உருவாக்கமுயல்கிறுர்.

### இந்திரா தடுத்திருக்கலாம்

ரேபெலிக் கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்தை அவர் தக்க சமயத்தில் தலையிட்டிருந்தால் தவிர்த்திருக்கலாம்.

இம்மோதலில் 60 பேர்காயமடைந்தனர். 5 பேர் தொடர்ந்து மருத்துவ மனையில் சிகிச்சை பெறுகின்றனர்.

அவரின் சர்வாதிகாரத்தைக் காக்கும் போக்கினுல்தான் இக்கலவரமே நடந்தது. அவர் மேடைக்குச் செல்கையில் அவரைச் சுற்றி துப்பாக்கிகள் முதலான ஆயுதங்கள் தாங்கிய குண்டர்களும் சென்றதாக நேரில் பார்த்தவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்.

இதேவேளை தற்போது லண்டனில் உள்ள பாரத மத்திய அமைச்சர் திரு. ஜோர்ஜ்பெர்ணண்டஸ் அங்கு அளித்த பேட்டி ஒன்றில் 'திருமதி காந்தி மீண்டும் அரசியலுக்கு வருவது என்பது அசாத்தியம். காங்கிரஸ் கட்சி ஆட்டம் கண்டுவிட்டது. அக்கட்சி முற்றுக சிதறிவரும் கட்டத்தில் இருக்கிறது' என்று கூறியுள்ளார்.

'கலாசாலை இறுதிப் பரீட்சை

# இந்த ஆசிரியர்களுக்கும் இடம் அளிக்கவேண்டும்''

யாழ்ப்பாணம், புதன்

தமது சொந்தச் செலவில் ஆசிரிய பயிற்சிக்கலூரிகளில் பயிற்சி பெற்ற 50 தோட்ட ஆசிரியர்களை இம்முறை ஆசிரியகாலசாலை இறுதிப்பரீட்சையில் தோற்றுவதற்கு கல்வியமைச்சு அதிகாரம் வழங்க வேண்டும்.

இவ்வாறு மகஜர் ஒன்றின் மூலம் இலங்கை ஆசிரிய சேவைச் சங்கம் கல்வியமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்தினுவைக் கோரியுள்ளது.

இம் மகஜர் மேலும் தெரிவிப்பதாவது: அரசாங்கம் தோட்டப்பாடசாலைகளைச் சுவீகரிப்பதற்கு முன்னர் 50 தோட்ட ஆசிரியர்கள் தமது சொந்தச் செலவில் ஒன்றரை ஆண்டுகாலமாக ஆசிரியபயிற்சிக் கல்வியைப் பெற்றிருந்தார்கள் அரசாங்கம் தோட்டப் பாடசாலைகளைச் சுவீகரித்த பின்னர் இவர்கள் மீண்டும் சேவையாற்றிய இடங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இதனுல் இவர்களை ஆசிரிய பயிற்சிக்கல்லூரி இறுதியாண்டுப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்குமாறு கோருகிறேம்'' என குறிப்பிடப்பட்டுள்ளது. (கெஉ)

### இன்று காலை கூடுவர்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை சீனிக்கூட்டுத்தாபனத் தலைவர் திரு. நீல் யாப்பாவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி பாதிக்கப்பட்ட சீனிக்கூட்டுத்தாபன ஊழியர்கள் இன்று புதன் கிழமை காலை ஒன்பதரை மணிக்கு நாவலர் வீதியில் உள்ள பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் பணிமனையில் ஆராய்ந்து முடிவுசெய்வார்கள்.

### பாதிக்கப்பட்ட—

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சாங்கபாதுகாப்பு நடவடிக்கைகள் அவர்களுக்கு உயிர்ப்பாதுகாப்பு அளிக்கும் என்ற நம்பிக்கை இல்லாததினுல் அவ் ஊழியர்கள் வேலைத்தலத்திற்குச் செல்லமுடியாது.

இது சம்பந்தமாக தூதுக் கோஷடி ஒன்று பிரதம மந்திரி, பொதுநிருவாக உள்நாட்டு அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து நடவடிக்கை எடுப்பதற்கு தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி முயற்சித்து வருகிறது.

வேலைக்குத் திரும்பும்படி அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு தற்போது கொடுத்திருக்கும் காலக்கெடுவை நீடிக்குமாறும் தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. (இ)

### கொள்ளைகள்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி

நிறுத்திவிட்டு ஓடியதாகக் கருதப்படும் இடத்தையும் அவர்கள் ஓடி ஒளித்த இடத்தையும் இந்தக்குழு பார்வையிட்டதுடன் கொள்ளைக் கோஷ்டிக்கும் இராணுவத்துக்குமிடையில் துப்பாக்கிச் சண்டை நடைபெற்ற இடத்தையும் பார்வையிட்டது.

### ரோந்துகாவல் பலப்படுத்தப்பட்டது

இந்த இடங்களை நில அளவையாளர்கள் அளந்தனர்.

இதேவேளையில் வன்முறைகளையும், கொள்ளைகளையும் தடுப்பதற்குப் பொலிஸாரும், இராணுவமும் தமது ரோந்துக் காவலைப் பலப்படுத்தியிருக்கின்றன.

சமீபத்திய கலவரத்தின் போது கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை மீட்பதிலும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## நாடும் நடப்பும்

ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த சமயம் ஒரு நாள் நள்ளிரவு எங்கள் அலுவலகத் தொலைபேசி மணி அடித்தது.

''ஹலோ'' என்று எடுத்துக் கேட்டதும் பெரிய கடைப்பக்கம் என்னவோ நடக்குதாம்; தீவைக்கப்பட்டதாகக் கேள்வி'' என்று சொன்ன குரல் றிசீவரை வைத்துவிட்டது.

சில தினங்களாகவே இரவில் அடிக்கடி வானத்தையும் பல பக்கங்களையும் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்ட நாம் அன்றும் தொலைபேசி அழைப்பு வருவதற்குச் சிறிது தூரத்துக்கு முன்னரும் ஏதாவது 'ஒலி' தெரிகிறதா என்று பார்த்துவிட்டுத் தான் கட்டையைப்போட்டோம்!

தொலைபேசித் தகவல் கிடைத்ததும் யன்னல் வழியாகத் தலையை நீட்டிப் பார்த்தோம். இலேசாக ஒளி தெரிந்தது! பின்னர் அது பெரிதாகப் பெரும் சுவாலையாகக் காட்சியளித்தது. எந்த இடத்தில் என்ன தீப்பற்றியது என்பது பற்றிப் பின்னர் தொலைபேசியில் விசாரித்துத் தெரிந்து கொண்டு அந்த அதிகாலை வேளையிலும் அந்தச் செய்தியைச் சிறந்ததாகப் பிரசுரித்தாவது மக்களுக்குத் தெரியப்படுத்திஞேம். இது எங்கள் வேலை தான்!

ஆனுல் அன்றைய இரவில் யாழ். நகர மக்களில் பலரின் மனநிலை எப்படி இருந்ததென்பதற்கு ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன்.

தீச்சுவாலை உயரக்கிளம்பி பயங்கரமான ஒளியைப் பரப்பிய அதே சமயம் ''பட், பட், படார், படார்'' என்ற வெடிச் சத்தமும் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தன

யுத்தகளத்தில் இருதரப்பிருக்கிடையில் நடைபெறும் கடும் சமர்போன்று இந்த வெடிச்சத்தம் பலருடைய செவிகளிலும் விழுந்தன. இது மட்டுமல்ல நகரமே தீப்பிடித்துப் பரவி வருவது போல் சிலருக்கு ஒரு பிரேமை.

இப்பகுதியில் ஓலைக் குடிசைகளில் வாழ்ந்தவர்கள் சிலர் மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு கோயில் மண்டபங்களில் போய்த் தஞ்சம் புகுவதற்கு ஆயத்தம்!

நல்லவேளை அப்படியொன்றும் நிலைமை மோசமாகவில்லை.

யாழ். பஸ் நிலையத்துக்கு அருகேயிருந்த கடைகள் தீப்பற்றி எரிந்த போது சோடா போத்தல்களும் வெடித்துச் சிதறிய ஒலிதான் போர்க்களம் போல் ஒலிகிளம்பக் காரணமாக இருந்ததென்பது மறுநாள் தான்தெரிந்தது.

மறுநாள் காலை நான் எனது வீட்டுக்கு நிலைமையைப் பார்க்கச் சென்றபோது தான் என் வீட்டுக்காரர்களும் மூட்டை முடிச்சுக்கட்டிய விஷயம் தெரிந்தது!

இதேஇப்படியென்ருல் அடிக்கடி யுத்தம் நடைபெறும் மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

வர்களின் நிலை எப்படியிருக்கும்?

0 0 0

நேற்றுப் பிற்பகலில் யாழ்ப்பாண நகரில் ஒரு ஹெலிகெப்டர் பறந்து கொண்டிருந்தது.

''ஜே. ஆர். வந்திருக்கிருரோ?''

இப்படி ஒருவரின் விசாரணை! கலவரம்பற்றிய செய்திகள் வந்துகொண்டிருந்த சமயம்.

ஒரன்பர் ஒருநாள் மாலை அவசரமாக வந்தார்.

''இந்தியப் பிரதமர் தேசாய் வந்திறங்கியிருக்கிருராமே உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

''அப்படியொன்றும் எங்களுக்குத் தெரியாது. அப்படி அவர் நினைத்தவுடனே இங்கு வந்து இறங்கவும் மாட்டார்'' என்றேம்.

''நான் இப்ப கொஞ்சம் முந்தித்தான் றேடியோ கேட்டுவந்தனுன். சிலோனில் தேசாய் போய் இறங்கியதாகச் செய்தி சொன்னதைக் கேட்டேன் என்ருர் விடாப்பிடியாக.

அது சிலோன் அல்ல வட இந்தியாவில் ஒரு மாநிலமான அஸ்ஸாமின் தலைநகரான 'ஷில் லாங்' என்பதை அவருக்கு விளங்கப்படுத்தி அங்கு தான் தேசாய் போயிருக்கிருர் என்று அவரைத் திருப்திப்படுத்துவது பெரும்பாடாகப் போய்விட்டது. இவற்றை ஏன் இங்கு குறிப்பிட்டேன் னென்ருல் மக்களின் மன நிலையைத் தெரிந்து கொள்வதற்காகவே.

- ஊர்சுற்றி

**மரண அறிவித்தல்**

**திருமதி நாகலிங்கம் சின்னம்மா**

இவர் கொக்குவில் கிழக்கு செம்பியன் ஒழுங்கை காலஞ்சென்ற நாகலிங்கத்தின் மனைவியும் காலஞ்சென்ற மனாயா மயில்வாகனம், சரஸ்வதி, ஞானம் ஆகியோரினதும், குணவதி, சித்தாமணி, மகேஸ்வரி, மனோன்மணி, சுப்பிரமணியம் (யாழ்ப்பாணம் பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை) ஆகியோரினதும் தாயாரும், மயில் வாகனம், பரம்சோதி செல்லையா, வன்னியசிங்கம் (ராம கிருஷ்ணஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரது மாமியாரும் ஆவார். இறுதிக் கிரியைகள் இன்று புதன்கிழமை பகல் 2 மணிக்கு கொக்குவில் மயானத்தில் நடைபெறும்.

7171

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka